பக்கங்கள் 08

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 12 புதன்கிழமை (25.03.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 97

## யாழில் கொரோனா வைரஸை பரப்பிய

# போதகரின் பின்னணி தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும்

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு



*(யாழ்ப்பாணம்)*

*யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று கிறிஸ்தவ மதபோதகரினால் பரப்பப்பட்ட நிலையில், இதன் பின்னணியில் பொலிஸாரே காணப்படுவதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குற்றஞ்சாட்டினார். இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.* *(04ஆம் பக்கம் பார்க்க)*

## சுதுமலை வீதிக்கு தடை

### தாவடி தொடர் கண்காணிப்பில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தாவடி - சுது மலை வீதியானது போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது. 04

தேவாலயத்தாலேயே

## வடக்கில் ஊரடங்கு

### பாதுகாப்பு செயலாளர்

(கொழும்பு)

கடந்த மார்ச் 20 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டு வரும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களின் எண்ணிக்கை 04

ஊடகம் சமூக பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## கொரோனா வைரஸை மதத்தால் குணப்படுத்த முடியாது

### ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸை மதத்தால் குணப்படுத்தலாம் என ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்துவது தொடர்பில் ஊடக நிறுவனங்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று முழு உலகையே அச்சுறுத்தும் கொரோனா வைர 04

## கொரோனா பீதி ஓயமுன் சீனாவில் ஹண்ட்டா வைரஸ் ஒருவர் பலி

(பீஜிங்)

சீனாவில் புதிதாகத் தோன்றியுள்ள ஹண்ட்டா என்ற வைரஸுக்கு ஒருவர் பலியாகியுள்ளார்.

சீனாவில் தோன்றிப் பரவி உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸுக்கே இன்னமும் முடிவு காணப்படாத நிலையில், தற்போது அதே சீனாவில் புதிதாக ஒரு வைரஸ் தோன்றியுள்ளது.

யுனான் நகரில் இந்தத் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக சீனாவின் குளோபல் டைம்ஸ் செய்தித்தாளின் அதிகாரப்பூர்வ சுட்டுரையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சுட்டுரைத் தகவலின்படி, 04

## 102 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்றுக்கு இலக்காகிய மேலும் 5 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இரண்டு நோயாளர்கள் குணமடைந்து 04

214 சமுர்த்தி பயனாளிகளுக்கு

## சண்டிலிப்பாயில் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பு?

### யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவரின் மனைவி மூலம், சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள 214 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார். யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற் 04

## ஊரடங்கை மீறிய 2,405 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 2,405 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் உட்பட 646 வாகனங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 04

ஊரடங்கின் போது

## மருந்தகங்கள் திறக்க அனுமதி

(கொழும்பு)

நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள தருணத்திலும் தேவைக்கேற்ப மருந்தகங்களைத் திறப்பதற்கு அனுமதியளிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுகுறித்து, சுகாதார அமைச்சினால் நேற்று செவ்வாய்கிழமை வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில், கொரோனா 04

கொழும்பு, களுத்துறை, கம்பஹா

## கொரோனா பரவும் ஆபத்தான வலயங்களாக பிரகடனம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அதிகம் பரவும் மாவட்டங்களாக, அடையாளம் காணப்பட்டுள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்கள், மிக ஆபத்தான வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி மாவட்டங்களுக்கு, மறுஅறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

மேற்படி மாவட்டங்களில், பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் அதிகளவு பொது இடங்களில் ஒன்றுகூடினர் என்றும், இதனால் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இத 04

## சுகாதார பணிப்பாளரை அச்சுறுத்திய விவகாரம்

### ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன்; ஆளுநர் சார்ள்ஸ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதாரப் பணியாளரைப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் அச்சுறுத்திய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதாரப் பணிப்பாளரை தொலைபேசி மூலம் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளரால் எழுப்பட்ட கேள்வி ஒன்றிற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார். (ம-3,10)








# அலைமோதிய மக்கள்















படங்கள்:-சுபேசன்,தவசீலன்















**ஊரடங்குச் சட்டம் நேற்று தளர்த்தப்பட்ட வேளையில் வங்கிகள், மருந்தகங்கள், பல்பொருள் அங்காடிகள், சதொச, பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனை நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று பொருட்களைக் கொள்வனவு செய்தனர். (இ)**

# தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தினரின் மனிதாபிமானம்







(முல்லைத்தீவு)

ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்பட்டபோது முல்லைத்தீவில் தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் இளைஞர், யுவதிகள் பல்வேறுபட்ட மனிதாபிமான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

பொதுமக்கள் முகக் கவசங்கள் இல்லாமல் வீதிகள் மற்றும் வங்கிகள் முதலான பொது இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் மக்களின் இக்கட்டான நிலை அறிந்து தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தினரால் முகக் கவசங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் மற்றுமோர் மனிதாபிமான பணியாக தண்ணீரூற்று பகுதியில் வசிக்கின்ற அன்றாடம் கூலி வேலை செய்கின்ற 15 குடும்பங்களுக்கு அரிசி, மா,சீனி,பருப்பு முதலான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அத்தோடு இக்கிராமத்தில் வசிக்கின்ற குடும்பங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு ஒரு நீர்த் தாங்கியும் வழங்கப்பட்டது. (இ-9)

# ருத்ர தாண்டவமாடும் கொரோனா வைரஸ் 195 நாடுகளில் பரவியது


## 18 ஆயிரத்தைத் தாண்டியது பலி 4 இலட்சத்து 15,063 பேர் பாதிப்பு

| நாடு | பலி | பாதிப்பு |
|---|---|---|
| இத்தாலி | 6820 | 69176 |
| சீனா | 3277 | 81171 |
| ஸ்பெயின் | 2800 | 39676 |
| ஈரான் | 1934 | 24811 |
| பிரான்ஸ் | 1100 | 22304 |
| அமெரிக்கா | 667 | 51737 |
| ஜப்பான் | 43 | 1193 |
| இங்கிலாந்து | 422 | 8077 |
| இந்தியா | 10 | 536 |
| ஜேர்மனி | 156 | 32781 |
| சுவிஸ்சர்லாந்து | 122 | 9877 |
| நெதர்லாந்து | 276 | 5,560 |
| பெல்ஜியம் | 122 | 4,269 |
| பிரேசில் | 34 | 2,018 |
| கிரீஸ் | 20 | 743 |
| இந்தோனேசியா | 55 | 686 |
| பிலிப்பைன்ஸ் | 35 | 552 |
| ஈராக் | 27 | 266 |
| சான் மரினோ | 21 | 187 |
| அல்ஜீரியா | 19 | 230 |
| அவுஸ்திரேலியா | 08 | 2136 |
| கனடா | 25 | 2091 |
| நோர்வே | 12 | 2625 |
| கங்ஹேரி | 08 | 187 |
| டென்மார்க் | 24 | 1577 |
| மலேசியா | 16 | 1624 |
| பாகிஸ்தான் | 07 | 972 |
| தாய்லாந்து | 04 | 827 |
| சிங்கப்பூர் | 02 | 558 |
| பங்களாதேஷ் | 04 | 39 |

## அனைத்துப் போர்களையும் உடனடியாக நிறுத்துங்கள்

### ஐ.நா.செயலர் மன்றாட்டம்

(நியூயோர்க்)
உலகில் இடம் பெற்று வரும் அனைத்துப் போர் களையும் உடன டியாக நிறுத்துங்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அந் தோனியோ குட்ரேரஸ் வேண்டுகோள் விடுத்தார்.



சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 195 நாடுகளுக்குப் பரவியுள்ளது.

மனித குலத்துக்கே மிகப்பெரும் அச்சு றுத்தலாக விளங்கி வரும் இந்த வைரஸ் இதுவரை 4 இலட்சத்துக்கும் மேற் பட்டவர்களுக்குப் பரவியுள்ளது. அதேவேளை 16 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

கொரோனா வைரஸ் உலகையே ஆட்டிப்படைத்துவரும் நிலையில் பல்வேறு நாடுகளில் உள்நாட்டுச்சண்டை, பயங்கரவாதத் தாக்குதல்கள் என இடைவிடாமல் போர்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், உலகில் இடம்பெற்று வரும் அனைத்து போர்களையும் உடனடியாக நிறுத்துமாறு உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச செயலாளர் அவசர வேண்டு கோள் விடுத்தார்.

இது குறித்து நேற்று அவர் தெரிவிக்கையில் “உலகின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போர்களையும், சண்டைகளையும் உடனடியாக நிறுத்துமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

விரோதங்கள், அவநம்பிக்கை, பகைமை ஆகியவற்றிலிருந்து பின்வாங்கி ஆயுத மோதல்களை உடன் முடிவுக்குக் கொண்டு வாருங்கள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது உயிரைக் காக்க உண்மையான போர் செய்யும் (கொரோனா வைரஸ்) நேரம் வந்து விட்டது” என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## கொரோனா வைரஸை கட்டுப்படுத்த 69 வகை மருந்துகள் பரிசோதனை

(நியூயோர்க்)
உயிர்க்கொல்லி நோயான கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த இன்னும்மருந்துகள் கண்டு பிடிக்கப்படவில்லை. எனவே பல்வேறு மருந்து மாத்திரைகள் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியுமா? என ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் 69 வகை மருந்துகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை ஆராய்ச்சியாளர்கள் குழு வெளியிட்டது. ‘கோவிட்-19’ எனப் பெயரிடப்பட்ட கொரோனா வைரஸை கட்டுப்படுத்த ஏற்கனவே பாவனையிலுள்ள பல்வேறு மருந்து, மாத்திரைகள் பரிசோதிக்கப்பட்டன.

புற்றுநோய், பக்கவாதம் மற்றும் இரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு 24 வகை மருந்துகளை உணவு மற்றும் மருந்தியல் நிர்வாகம் பரிந்துரை செய்து அவை நடைமுறையிலுள்ளன. இந்த மருந்துகளும் கொரோனா வைரஸ் நோய்க்கு பரிசோதிக்கப்பட்டன. இந்த மருந்துகள் ‘செல்’களை தாக்கியுள்ள கொரோனா வைரஸை அழிக்குமா? என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்காணித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 90 வீதம் பேர் குணமடைந்ததாக சீனா தகவல்

(பீஜிங்)
கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 90 சதவீதம் பேர் குணமடைந்து, வைத்தியசாலைகளிலிந்து வீடு திரும்பியதாக சீன தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்தது.

சீனாவில் கொரோனா வைரஸால் 81 ஆயிரத்து 93 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 90 சதவீதம்பேர் குணமடைந்தனர். (இ)

## கொரோனா தடுப்பு முகாம்களிலிருந்து இதுவரையில் 311 பேர் வெளியேறினர்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வெளிநாடுகளில் இருந்து வருகை தந்து இலங்கையில் தனிமைப்படுத்தல் முகாம்களில் சிகிச்சை பெற்று வந்த முதலாவது குழுவினர் வெளியேறினர்.



வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த 311 பேர் அடங்கிய குழுவொன்றே இவ்வாறு தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்து வெளியேறியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இத்தாலி, ஈரான் மற்றும் தென்கொரியாவில் இருந்து வருகை தந்தவர்களே இவ்வாறு சிகிச்சை பெற்று வெளியேறினர். கந்தகாடு தடுப்பு முகா மிலிருந்து 108 பேரும், புனானை தடுப்பு முகாமிலிருந்து 203 பேரும் இவ்வாறு வெளியேறியதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (இ)

## வடக்கில் ஊரடங்கு...

அதிகரித்து வருவதாக தெரிவித்த பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.

கொரோனா வைரஸ் பரவலை தடுத்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு முன்கூட்டிய நடவடிக்கையாகவே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் வைரஸ் பரவும் அபாயத்தை கட்டுப்படுத்தக்கூடிய கட்டத்திற்கு குறைக்கும் வரை பாதுகாப்பு அமைச்சினால் மீண்டும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படும் எனவும் இவ்வேளையில் மக்கள் தமது வீடுகளுக்குள் தரித்திருந்து அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்குமாறும் பாதுகாப்பு செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். நாங்கள் நடமாட்டத்தை நிறுத்தி, நேரடி தொடர்புகளை தவிர்க்காவிட்டால் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவது கடினம்.

பொலிஸ் ஊரடங்கு அமுலில் உள்ளவேளையிலும் அத்தியாவசிய சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அரச அதிகாரிகள் தமது கடமைகளுக்கு சமூகமளிக்க சேவை அடையாள அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

யாழிலுள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற சம்பவத்தின் காரணமாகவே மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லை தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது.

அந்த மாவட்டங்களில் உள்ள மக்களிடையே வைரஸ் பரவலை தடுக்க வேண்டிய நிர்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டதால், முழு வடக்கு பிராந்தியத்திலும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தும் இந்த திடீர் முடிவை தாங்கள் எடுத்ததாகவும், ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளபோது பயணங்களை தவிர்த்து கொள்ளுமாறும், அனைவரும் தமது வீடுகளில் இருக்க வேண்டும்.

நாட்டில் வசிக்கும் 22 மில்லியன் மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸ் மற்றும் படை வீரர்கள் கொரோனா வைரஸிலிருந்து பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்கள் பொறுப்புடன் செயல்படவில்லை என்றால், படையினர் மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் செய்யும் கடினமான பணிகள் பயனற்றதாக அமைந்து விடுவ தோடு ஒட்டுமொத்த மக்களும் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டிவரும்.

படையினரால் நிறுவப்பட்ட தனிமைப்படுத்தும் மையங்களில் 3,500 க்கும் மேற்பட்டோர் கண்காணிப்பில் உள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, நாங்கள் 19,000 க்கும் மேற்பட்ட நபர்களை அடையாளம் கண்டுள்ளோம், மேலும் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு அவர்களுக்கு அறிவித்துள்ளோம். இந்த நபர்கள் வீட்டிலேயே தங்கி சுகாதார அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகளுக்கு அத்தியாவசிய பொருட்களைப் பெறுவதற்காக ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்ட சில சமயங்களில் பொறுப்புடன் செயல்படுமாறு பாதுகாப்பு செயலாளர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் கூறினார். (ம-3)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொழும்பிலிருந்து யாரும் எடுத்துவர அனுமதி

(கொழும்பு)

கொழும்பு உட்பட்ட வெளி மாவட்டங்களிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றி வரவும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்லவும் வாகனங்களுக்கு வழி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் சாரதி மற்றும் உதவியாளரின் பெயர்களைப் பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் உணவுப் பொருள்களை கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களிலிருந்து கொள்வனவு செய்து எடுத்து வரவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்வதற்குமான வாகன வழி அனுமதி வழங்கப்படுகிறது.

வாகனத்தின் சாரதி, உதவியாளரது பெயர், தேசிய அடையாள அட்டை, வாகன இலக்கம், யாழ்ப்பாண மாவட்டத்துக்கு எடுத்து வருகின்ற பொருட்கள் ஆகிய விவரத்துடன் உரிய பிரதேச செயலரது பரிந்துரையைப் பெற்று அலுவலக நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மாவட்டச் செயலகத்தின் பரிந்துரையைப் பெற்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண இராணுவ சிவில் பாதுகாப்பு அதிகாரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சண்டிலிப்பாயில் கொரோனா...

கண்டவாறு தெரிவித்தார்.

தாவடிப் பகுதியில் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உள்ளான நபரின் மனைவி சமுர்த்தி உத்தியோகஸ்தராவார்.

அவர் அண்மையில் 214 சமுர்த்தி பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கியுள்ளார். எனவே அவரிடம் இருந்து சமுர்த்தி கொடுப்பனவினை பெற்றுக் கொண்ட பயனாளிகள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட நபர்களை தீவிரமாக கண்காணிக்கும் நடவடிக்கை உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, கைதடி சந்தியில் உள்ள இலங்கை வங்கியில் பணியாற்றும் பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான நபரின் வீட்டுக்கு அருகில் இருப்பதுடன், அவரது உறவினர் என அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் இலங்கை வங்கி கிளை 14 நாட்கள் பூட்டப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பணியாளர் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதுடன், குறித்த வங்கி கிளை அலுவலகத்தில் கிருமி நீக்கிகள் விசிறப்பட்டிருக்கிறது. (ம-3)

## கொரோனா பீதி...

ஷான்டோங் மாகாணத்தில் யுனான் மாகாணத்தில் பணிபுரிந்து வந்த ஒருவர், திங்கட்கிழமை, ஷான்டோங் மாகாணத்துக்குத் தனிப் பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தபோது பேருந்திலேயே உயிரிழந்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் ஹன்ட்டா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த பேருந்தில் பயணம் செய்த 32 பேருக்கும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. ஆனால், சோதனை முடிவு பற்றிய விவரம் தெரியவில்லை.

மேலும் ஹன்ட்டா வைரஸ், எலிகளிடமிருந்து, எலிகளின் சிறுநீர் மூலம், பரவக் கூடியது. மனிதரிடமிருந்து மனிதருக்குப் பரவக் கூடிய வாய்ப்பு மிகவும் குறைவு எனக் கூறப்படுகிறது. (ம-3)

## கொரோனா பரவும் ஆபத்தான...

னைக் கருத்திற்கொண்டே, மேற்படி மாவட்டங்களை மிக ஆபத்தான வலயங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இன்று முதல், அத்தியாவசியமான பொருள்களை வீடுகளுக்குச் சென்று விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில், சில வர்த்தக நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

லொறி, வான், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் பொருள்களைக் கொண்டு சென்று விநியோகிப்பதற்கும் ஊரடங்குசட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள காலத்தில், இந்த வாகனங்கள் சேவையில் ஈடுபடுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனா...

ஸைக் கட்டுப் படுத்துவது தொடர்பில் அனைத்து நாடுகளும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் விதிமுறைகளை மீறி மதத்தால் கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதும் அது தொடர்பில் ஊடகங்களில் விளம்பரம் செய்யும் போதும் ஊடகங்கள் பொறுப்புடன் நடத்துகொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## போதகர் பின்னணி தொடர்பில்...

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் அவர் நேற்று நடத்திய பத்திரிக்கையாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அபாயம் ஏற்பட்டவுடன் மதரீதியாக மக்களை அதிகமாக கூட்டி கூட்டங்கள் பிரார்த்தனைகள் நடத்த வேண்டாம் என அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது. எனினும் அந்த கட்டளையை மீறி யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் அதிகளவான மக்களைக் கூட்டி பிரார்த்தனை நடைபெற்றது.

இந்த மதக் கூட்டத்திற்கு சுவிஸ் நாட்டில் இருந்து மத போதகர் ஒருவர் வந்துள்ளார். அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருந்துள்ளது.

நாட்டில் மதக் கூட்டத்திற்கு அரசு தடை போட்ட போதிலும் இங்கு நடைபெற்றமை மற்றும் மத போதகரை பாதுகாத் தமை போன்றவற்றில் முக்கிய காரணியாக யாழ்ப்பாணம் பொலி--ஸார் செயற்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் இந்த சம்பவம் தொடர்பில் பல தகவல்கள் வெளியாகும். ஆகவே தறபோது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று தாக்கம் தொடர்பில் பொது மக்கள் மிக அவதானமாக பொறுப் புணர்வுடன் செயற்பட வேண்டுமெ னக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்த மதபோதகரினால் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அறியக் கிடைத்தது.

குறித்த மதபோதகர் இலங்கைக்கு வருகை தந்தது தொடர்பிலும் அவர் நடைபெற்ற ஆராதனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட விதம் தொடர்பிலும் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

எனவே குறித்த விடயம் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

## மருந்தகங்கள் திறக்க அனுமதி...

வைரஸ் கட்டுப்படுத்தல் தொடர்பாக அரசாங்கத்தால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மருத்துவ கிளினிக்குகள் மற்றும் / மருந்தகங்களில் மருந்துகளைப் பெற்றுக் கொள்பவர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இது தொடர்பாக, ஆராய்ந்து சுகாதார அமைச்சினால் வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அனைத்து மருந்தகங்களையும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் தேவைக்கேற்றவாறு திறப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதியளிக்கத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக பதில் பொலிஸ் மா அதிபருக்கு சுகாதார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஊரடங்கின்போது மருந்து கொள்வனவு செய்பவர்களின் அதற்கான சீட்டினை பரிசோதிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறும் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மருந்தகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் மருந்துகளைக் கொண்டுசெல்லும் வாகனங்கள் தொடர்பாக அவதானம் செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 102 பேருக்கு...

வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் தொற்றுக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் 229 பேர் தொடர்ந்தும் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் வைத்தியசாலையில் பணியாற்றிய சமூக வைத்திய நிபுணர் ஒருவரே தொற்றுக்குள்ளாகியுள்ளார். (ம-3)

## ஊரடங்கை...

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி முதல் நேற்று மதியம் 12.00 மணிவரையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் வீதியில் சுற்றித்திரிந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, ஒன்று கூடி மது அருந்தியமை, வாகனங்களில் பயணித்தமை, உணவகங்களை திறந்து வைத்திருந்தமை, குடிபோதையில் வீதிகளில் ஒழுங்கீனமாக நடந்துக் கொண்டமை மற்றும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் குறித்த பிரதேச பொலிஸ் நிலையங்களினால் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. (ம-3)

## சுதுமலை வீதி...

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவரின் வீடு அமைந்துள்ள தாவடிக்கிராமம் முழுமையான கண்காணிப்பில் உள்ள நிலையில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் அப்பகுதியில் இருந்து வெளியேறவோ அல்லது உள் நுழையவோ அனுமதி மறுக்கப்பட்டது.

கிராம சேவகர், பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர், பொதுச் சுகாதார அதிகாரி, பொலிஸார், இராணுவத்தினர் அங்கு கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3)